பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 12 திங்கட்கிழமை 25.04.2022 கதிர் 171

### இது ரகசியம் அல்ல!

உதைபந்தாட்டம் ஒரு கலை. மைதானத்தில் பந்து அடிக்கும் இடமெல்லாம் – பந்து போகும் இடமெல்லாம் – 11 வீரர்களும் ஓடிச் சென்று, பிணைந்து, நசிந்து, இடிபட்டு, விளையாடும் ஓர் அணியுடன் இன்னொரு கைதேர்ந்த அணி கூட விளையாட ☞2





# மொட்டுக் கட்சியும் இரண்டாகும் நிலை

## ராஜபக்ஷ சகோதரர்களின் முரண்பாட்டினால் சிக்கல்

கொழும்பு ஏப்ரல் 25

அரசுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை அடுத்து மொட்டு கட்சி கூட்டணியில் இருந்து அதிருப்தியாளர்கள் குழு, சுயாதீனக் குழு என்ற பெயர்களில் நாற்பதுக்கும் அதிக எம்.பிக்கள் வெளியேறிய நிலையில், எஞ்சியிருக்கும் நூற்றுக்கும் குறைவான எம்.பிகளுடன் பொதுஜன பெரமுன கட்சி இரண்டாக பிளவுபடும் சூழல் ஏற்பட்டிருப்பதாக சம்பந்தப்பட்ட தரப்புகளில் இருந்து தெரியவருகிறது. ☞2

## பால்மா விலையும் மீளவும் எகிறும்

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை இவ்வார இறுதியில் மேலும் அதிகரிக்கும் என பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

பால்மாவுக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டுள்ள தால் விரும்பியவாறு அதன் ☞2

## அத்தியாவசிய பொருள்களுக்கு மீள நிர்ணய விலை

அரிசி, கோதுமை மா, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு மீண்டும் நிர்ணய விலையை அறிமுகப் படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ☞2

## ‘கொலைக்கார கோட்டா வீட்டுக்குப் போ!’ பிரதமரின் இல்லச் சுவரில் பதிந்த வாசகம்





பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கொழும்பு விஜேராம மாவத்தை இல்லத்தின் சுவரில் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான வாசகங்களை எழுதி தங்களது எதிர்ப்புகளை வெளிப்படுத்தினர். ☞2

## யாழ்ப்பாணத்தில் அமெ. தூதுவர் கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு

(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்ப்பாணத்துக்கு நேற்றைய தினம் விஜயம் செய்த இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதர் ஜூலி சுங்கை யாழ்ப்பாண மாவட்ட



## ஆர்ப்பாட்டங்களின் மத்தியிலும் போக்குவரத்தை உறுதி செய்க!

### பொதுப் பாதுகாப்பு அமைச்சர் பணிப்புரை

பொது மக்களினால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களின் போது பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாதவாறு நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டில் முன்னெடுக்கப்படும் போராட்டங்களால் ☞11

## விபத்தில் பெண் சாவு



பூண்டுலோயா – கம்பளை வீதியில் பாலுவத்த சந்தியில் நேற்று இடம்பெற்ற ☞11

## பிரதமரைப் பதவி விலகக் கோர எவருக்கும் அருகதை கிடையாது

### டலஸுக்கு நாமல் பதிலடி

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு கோருவதற்கு எவருக்கும் அருகதை இல்லை என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷம் அவர் தலைமையிலான அமைச்சரவையும் உடன் பதவி விலகி அனைத்து கட்சிகளும் அடங்கிய இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கு வழிவிட வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் ☞11

## புதிய அமைச்சரவை கூட்டம் இன்று

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இன்றுமாலைஅமைச்சரவைக்கூட்டம்நடைபெறவுள்ளது. தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் புதிய அமைச்சரவை பதவியேற்ற பின்னர் நடைபெறும் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் இதுவாகும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கான அமைச்சரவை யோசனையை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த கூட்டத்தில் முன்வைக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. ☞11

## பதவியை விட்டு விலகுவதைத் தவிர பிரதமருக்கு வேறு வழி ஏதுமில்லை!

### வலியுறுத்திக் கூறுகிறார் டலஸ் அழகப்பெரும

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதைத் தவிர அவருக்கு வேறு வழி ஒன்றுமில்லை என முன்னாள் அமைச்சரும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இப்போதைய நெருங்கிய சகாவுமான டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியில் தாமே தொடர்ந்து நீடிப்பார் என்றும், இடைக்கால அரசாங்கம் அமைந்தால் கூட அதுவும் தனது தலைமையிலேயே மலரும் என்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ☞11


## தம் திட்டம் குறித்து ஜனாதிபதி மகாநாயக்கர்களுக்குக் கடிதம்

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மகாநாயக்க தேரர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பான கடிதம் பௌத்த அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் நேற்றுக் காலை மகாநாயக்க தேரர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடிதத்தின் உள்ளடக்கம் ☞11

# தமிழ் மக்களுக்கு இன்னும் தலைமை இல்லை; ஆனாலும் கூட்டாக இயங்கும் நிலைமை வரும்!

## தமிழ் தேசியக் கட்சித் தலைவர் ஸ்ரீகாந்தா நம்பிக்கை



தமிழ் மக்கள் மத்தியில் இன்னமும் தமக்கான அரசியல் தலைமை இல்லை என்ற உணர்வு இருந்துகொண்டு வருகின்றது. என்றாலும் சுயமாக சிந்தித்து, கூட்டாக இயங்கும் நிலைமை ஒன்று உருவாகும், அது விரைவில் வெளிப்படுத்தப்படும் என தமிழ் தேசியக் கட்சியின் தலைவரும் சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற தமிழ்க் கட்சிகளின் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இந்தஜ் கலந்துரையாடல் அமைந்திருந்தது. இதில் ஆரோக்கியமான பதில் சிலவற்றுக்கு தீர்மானங்கள் கிடைத்துள்ளன. சில விடயங்களில் ஒற்றுமையான தீர்மானங்கள் கிடைக்கவில்லை.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வரும் விடயங்களில் ஒற்றுமையான பதில்கள் கிடைத்துள்ளன. இன்னமும் ☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடியாது. இது பலருக்கும் தெரிந்த பாடம்.

அந்த வகையில் அரசியலும் கூட ஒரு கலைதான். கலையாக அதை அணுகாத அரசியல்வாதியுடன் மல்லுக்கட்டுவது கஷ்டமே.

போன மாதம் 11ஆம் திகதி சில தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களை அலரி மாளிகையில் காலை விருந்துடன் சந்தித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. பலதும் பத்தும் விடயங்கள் பேசப்பட்டன. அப்போது இந்த 'கோட்டா கோ ஹோம்' போராட்டம் ஆரம்பித்திருக்கவில்லை.

ரணிலின் அரசியல் முடிந்துவிட்டது என்ற கணக்கில் பேச்சு திரும்பியது.

"ஆம். அரசியல் ஒரு கலை. அந்த வகையில் அதை அணுகாவிட்டால் விரைவில் தோற்று வெளியேற வேண்டியதுதான்" - என்ற சாரப்படக் கருத்து வெளியிட்டார் பிரதமர் மஹிந்தர்.

உண்மைதான். அரசியலைக் கலையாகக் கையாண்டமையால்தான் பிரேமதாஸ, சந்திரிகா, பிரபாகரன் போன்ற அரசியல் எதிரிகளுக்கு மத்தியில் இருந்து அவரால் மேலெழுந்து வர முடிந்தது.

ஒருதடவை வீட்டுக்கு மக்கள் அவரை அனுப்பிய பின்னரும் மீண்டு எழுந்து வர அவரால் முடிந்திருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் அரசியலை அவர் கலையாகக் கையாண்டமைதான்.

ஆனால் நிலைமை இப்போது அப்படி அல்ல. அரசியலைக் கலையாகக் கையாளத் தெரியாத - ஏன் அரசியலே தெரியாத - ஓர் இராணுவ அதிகாரியை நாட்டின் ஜனாதிபதி ஆக்கிவிட்டுத் தாம் இப்போது அரசியல் செய்ய முடியாமல் முழுசுகின்றார் அவர்.

பந்து போகுமிடமெல்லாம் 11 வீரர்களும் போய் பினைந்து கொண்டிருக்கும் அணியுடன் - உதைபந்தாட்டத்தை கலையாக அணுகாத அணியுடன் - விளையாடுவது எவ்வளவு கஷ்டமோ, அவ்வளவு கஷ்டம்தான் அரசியலை அரசியலாக அணுகத் தெரியாத - கலையாகக் கையாளத் தெரியாத - ஒருவரைப் 'பார்ட்னராக' சேர்த்துக்கொண்டு விளையாடுவதும். இப்போது அதே பார்ட்னர் அரசியல் எதிரியாகவும் மாறிவிட்டார் அத்தகையவருடன் அரசியல் சமர்க்களம் நடத்துவதும் கூட மஹிந்தருக்குக் கஷ்டமாகத்தான் இருக்கப்போகின்றது.

சகோதரர் என்றாலும் ஜனாதிபதியுடன் மோதினால் குறைந்தபட்சம் தற்காலிகமாகவேனும் அரசிலிருந்து வெளியேறி அல்லது வெளியேற்றப்பட்டு தனியாவர்த்தனம் வாசிக்கும் நிலைமை மஹிந்தருக்கு ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

அப்படி நேர்ந்தால், 2015-இன் பின்னர் கிட்டியது போல மஹிந்தருக்கு மீளெழுச்சிக்கு வாய்ப்பு இருக்குமா என்பது கேள்விக்குறியே .

2015 ஜனவரியில் அப்போதைய ஜனாதிபதி தேர்தலில் நான்கரை லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் அவர் தோற்றார் என்பது உண்மைதான். ஆனால் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு விக்கி விக்கி அழுது, அவரை அவரது தங்காலை இல்லத்துக்குக் கூட்டிச் சென்று விட்டனர். ஆனால் நிலைமை இப்போது அப்படி அல்ல. அவரை மட்டுமல்ல, அவரது ராஜபக்ஷ குடும்பத்தையே மக்கள் மண் வாரித் தூற்றிக் கலைப்பதற்கு ஒன்று திரண்டு இருக்கின்றார்கள். எங்கும் ராஜபக்ஷக்களுக்கு எதிரான மக்கள் அலை வெள்ளம்.

பிரதமர் மஹிந்தவையும் அவருடன் அரசியல் முரண்பாடு கொண்டு, முட்டி மோதத் தயாராகி வரும் அவரது சகோதரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அடித்து விரட்டாத குறையாக மக்கள் வீராவேசத்துடன் ஒன்றுபட்டு நிற்கின்றார்கள்.

இப்போது அரசியல் அஞ்ஞாதவாசத்துக்கு மஹிந்தர் புறப்பட்டால் அது அவருக்கு நிரந்தர அஞ்ஞாதவாசம் ஆகிவிடும்.

என்ன செய்யப் போகிறார் மஹிந்தர்? பெரும்பாலும் இன்று மாலை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்துடன் நிலைமை தெளிவாகும். ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்கும் விதத்திலான 19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை கொண்டு வருவதற்கு வழி செய்யும் அரசமைப்புத் திருத்தத்துடன் கூடிய தமது யோசனைத் திட்டத்தை பிரதமர் மஹிந்த இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கும் போது ஜனாதிபதி காட்டக்கூடிய பிரதிபலிப்பில் இருந்து விடயங்களை ஊகிக்க முடியும் என்று நினைக்கிறேன். பார்ப்போம் என்ன நடக்கிறது என்பதை...!

இதேசமயம் நேற்றிரவு நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பு எடுத்தார். அண்ணன் - தம்பி அரசியல் அதிகாரப் போட்டி பற்றிய எங்கள் பத்திரிகையின் நேற்று மாலை ஆசிரிய தலையங்கம் குறித்து பிரஸ்தாபித்தார்.

"இது அதிகாரத்துக்கான அண்ணன் - தம்பி போட்டி, பொறாமை, வஞ்சகம் எல்லாம். அவர்களின் (சிங்களவர்களின்) வரலாறு முழுவதும் இந்தப் போட்டி, பொறாமை, விரவிக் கிடப்பதை நீங்கள் மகாவம்சத்தில் காணலாம். அண்ணன் - தம்பி, மைத்துனர் மட்டுமல்லர், அப்பா - மகன் என்று ஆளையாள் துவம்சம் செய்த மரபு கதைகள் பல உண்டு. எங்களுக்குத்தான் இவை புதுமை." - என்றார் அவர்.

உண்மைதான். ஏற்க வேண்டிய நியாயம்தான்.

– மின்னல் –

---

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து நிதியமைச்சருடன் அடுத்த வாரம் பேச்சு நடத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் குணபால ரத்னசேகர தெரிவித்தார்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையினால், அத்தியாவசிய பொருள்களுக்கு நிர்ணய விலையை அறிமுகப்படுத்துவதில் பிரதான சவாலாக அமைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## மொட்டுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமையனார் பிரதமர் பிரதமர் மஹிந்த ராஜக்ஷவுக்கும் இடையில் அரசியல் முரண்பாடுகள் முற்றியமையை அடுத்து இருதரப்பினரும் தனித் தனியாக எம்.பிக்களை ஆளணி சேர்க்க முற்பட்டமையைத் தொடர்ந்தே இந்த நிலைமை உருவாகி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகக் கடிதம் ஒன்றைத் தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிக்கும் முயற்சி பஸில் ராஜபக்ஷவின் ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்பட்டதாகவும், அதற்கு ஆதரவாக நேற்று இரவு வரை ஐம்பது எம்.பிக்களின் ஒப்பங்களையே பெற முடிந்தது எனவும் ஒரு தகவல் தெரிவித்தது. அதற்கு மேல் ஆதரவு கிட்டுவது துர்லபம் எனவும் கூறப்பட்டது.

இதே சமயம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மொத்த எம்.பிகளில் 115 பேரின் ஒப்பத்தைப் பெற்று சத்தியக் கடதாசி ஒன்றை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கும் முயற்சியும் மறுபுறத்தில் முன்னெடுக்கப்படுகின்றது. அதிலும் மொட்டு கட்சியில் எஞ்சியிருக்கும் எம்.பிக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒப்பமிடப் பின்னடித்து விட்டனர் என்று கூறப்படுகின்றது.

அப்படி முழு நாடாளுமன்றத்திலும் 115 எம்.பிக்களின் ஆதரவை அந்த முயற்சிக்குப் பெற்றாலும் கூட மஹிந்த ராஜபக்ஷ தொடர்ந்தும் பிரதமராக நீடிப்பதா, அல்லது ஜனாதிபதி கோட்டாபயவின் தீர்மானத்துக்கு இடமளித்து பிரதமர் பதவி விலக வேண்டுமா என்ற சர்ச்சை தொடர்பில் மொட்டு கட்சியில் எஞ்சியுள்ள எம்.பிக்கள் ஏறத்தாழ சம எண்ணிக்கையில் பிளவுபட்டு நிற்கின்றனர் என்று கூறப்படுகின்றது. இது கட்சியின் பிளவுக்கு வழி செய்யும் என்று அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

---

## 'கொலைக்கார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசுக்கும் ஆட்சியாளர்களுக்கும் எதிராக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று கொழும்புக் கோட்டையில் ஆரம்பித்த பேரணி காலி முகத் திடலுக்கு செல்ல விடாமல் பொலிஸாரால் தடுப்புப் போட்டு மறிக்கப்பட்டது. அதையடுத்து மாணவர் ஒன்றியத்தினர் தங்கள் பேரணியின் பாதையைத் திடீரென் மாற்றினர். விஜேராம மாவத்தையில் உள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தை முற்றுகையிட்டனர். அங்கு போடப்பட்டிருக்கும் தடுப்புப் பேரணியைப் பேரணிகாரர்கள் உடைத்துக்கொண்டு முன்னேற முயன்றமையால், அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது.

பிரதமரின் இல்லத்தின் சுவரில் 'கொலைக்கார கோட்டா வீட்டுக்குப் போ', 'அன்று ரதுபஸ்வல; இன்று ரம்புக்கன', '225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் வேண்டாம்' என்கிற வாசகங்களை போராட்டக்காரர்கள் சுவரில் எழுதினர்.

## பால்மா விலையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விலையை பால்மா நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன எனவும், எவ்வளவு விலை அதிகரிக்குமென கூற முடியாதெனவும் அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஒரு கிலோ பால்மாவின் விலை 800 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரையில் அதிகரிக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622




தந்தை செல்வா அவர்களின் 45வது நினைவு நாள்
அஞ்சலியும் நினைவுப் பேருரையும்
26.04.2022 (நாளை)

தலைமை

ஓய்வுநிலை ஆயர் கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள்

(தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

1. மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலியும்

நேரம் :- முற்பகல் 09.30 மணி
இடம் :- தந்தை செல்வா நினைவிடம், யாழ்ப்பாணம்

2. நினைவுப் பேருரையும் புத்தக வெளியீடும்

நேரம் :- முற்பகல் 10.00 மணி
இடம் :- தந்தை செல்வா கலையரங்கம்,
யாழ் மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்

நினைவுப் பேருரையாளர்

பேராசிரியர். சங்கரன் விஜேசந்திரன்
பொருளியல் துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்,
"தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளும்
அரசியல் தீர்வை நோக்கிய முன்னெடுப்புக்களும்"

புத்தக வெளியீடு
அமரர்.ச.சகாயசீலன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
அவர்கள் எழுதிய
"இலங்கையின் தமிழ் அரசியல் இயக்கங்களும் தமிழ்த் தேசியவாதமும்"

முதற்பிரதி பெறுபவர்
திரு.ஈ.சரவணபவன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

மேற்படி நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் பரிதாபம்!

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் காலத்தில் ஐம்பத்தியிரண்டு நாள்கள் பிரதமராக இருந்தார் மஹிந்த ராஜபக்ஷ.

அச்சமயத்தில் நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பெறாத அவரைப் பின்கதவால் பிரதமராக்கிப் பெரும் அரசியல் களேபரங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்தினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. நாடாளுமன்ற அமர்வுகள் சந்தி சிரிக்கும் விவகாரங்களாகின. பெரும்பான்மை ஆதரவு இல்லாத அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு நாடாளுமன்றத்துக்குள்ளேயே தினசரி பெரும் போராட்டங்களை நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்த வேண்டி இருந்தது. அப்போதைய அந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்குப் பெரும் பிரயத்தனங்கள் செய்யப்பட வேண்டியிருந்தன.

அந்த நிலைமையை – அது போன்ற இக்கட்டை – மீண்டும் ஒரு தடவை எதிர்கொள்ள வேண்டியவரான நிலைக்கு இப்போது தள்ளப்பட்டிருக்கின்றார் மஹிந்த ராஜபக்ஷ.

அப்போதைக்கும், இப்போதைக்கும் ஒரே வித்தியாசம். அப்போது அவரது தரப்பு என்று ஒரு பலமான எம்.பிக்கள் கூட்டம் அவருடன் இருந்தது. இப்போது அப்படி ஒரு கூட்டம் அவரைச் சூழ இருக்கின்றதா என்பதுதான் கேள்வி.

தாமே பிரதமர், தமக்கே எம்.பிக்களின் ஆதரவு தாராளமாக உண்டு என்று அவர் நம்பிக் கொண்டிருந்தாலும் கள நிலைமை அப்படி இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அண்ணன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தம்பி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் முரண்பாடு. அண்ணன் பிரதமர் மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புவதன் மூலம் தன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற நப்பாசையில் தம்பி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முடிவு எடுத்துக் காய் நகர்த்துகின்றார் என்றெல்லாம் செய்திகள் வெளியாகத் தொடங்கியதுமே காட்சியும் மாறத் தொடங்கி விட்டது. கட்சி நிலையும் மாறத் தொடங்கி விட்டது.

அதிகாரத்துக்குப் பின்னால் அணி திரளும் அரசியல்வாதிகளைத்தான் ராஜபக்ஷக்கள் தங்கள் மொட்டுக் கட்சியில் திரட்டி வந்தனர் என்பது கண்கூடு.

இப்போது அதிகாரப் போட்டி வந்ததும் அந்த அரசியல்வாதிகள் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டனர். அதிகாரம் ஜனாதிபதி வசம். எந்நேரமும் பிரதமரைத் தூக்கிக் கடாசும் அதிகாரத்தின் உச்சத்தில் அவர் இருக்கின்றமையால், மொட்டுக் கட்சியில் எஞ்சியுள்ள எம்.பிக்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைக் கைவிட்டு மெல்ல ஜனாதிபதி பக்கம் அணி திரண்டு வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியை – எழுச்சியை – கண்டு பயந்த மொட்டுத் தரப்பு எம்.பிக்களில் கணிசமானோர் ஏற்கனவே அதிருப்திக்குழு, சுயாதீனக் குழு என்ற ஒவ்வொரு நாமங்களைத் தமக்குத் தாமே சூட்டிக் கொண்டு ராஜபக்ஷக்களை விட்டு மெல்லக் கழன்று விட்டனர்.

எஞ்சியிருப்போரில் கணிசமானோர் தம்மைக் கைவிட்டு அணி மாறுகின்றனர் என்பதை மூத்த – பழுத்த – அரசியல்வாதியான மஹிந்த ராஜபக்ஷ இன்றும் புரியாமலிருக்கின்றாரா என்பது கேள்வியே.

இதேசமயம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதை நிரூபிக்கும் விதத்தில் 115 எம்.பிக்களின் ஒப்பத்துடன் கூட்டுப் பிரமாணப் பத்திரம் ஒன்றை – சத்தியக் கடதாசி ஒன்றை – தயாரிக்கும் முயற்சியும் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

தம்பி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் அரசியல் ரீதியாக முரண்டு பிடித்திருக்கும் அண்ணன் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைமை பரிதாபத்திற்குரியதாகத்தான் இருக்கப் போகின்றது.

# நிலையான அபிவிருத்தித் திட்டங்களை இலங்கை அரசு என்றும் வரவேற்கும்!

## ஜனாதிபதி கோட்டா உறுதி



தற்போதைய நெருக்கடியான காலகட்டத்தில் எமது பொருளாதார மீட்சிக்கு உதவும் நிலையான முயற்சிகளுக்கான முதலீட்டு வாய்ப்புகள், தொழில்நுட்ப பரிமாற்றம், நிதியுதவி, விரிவான அபிவிருத்தி உதவிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு ஆகியவற்றுக்காக வழங்கப்படும் ஒத்துழைப்புக்களை இலங்கை அரசாங்கம் வரவேற்கின்றது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் குமாமோட்டோவில் ஆரம்பிக்கப்பட்ட நான்காவது ஆசிய பசுபிக் நீர் உச்சி மாநாட்டில் காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் –

எதிர்வரும் மூன்று வருடங்களில் அனைவருக்கும் சுத்தமான நீர், சுகாதாரம் மற்றும் நீர் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதே அரசாங்கத்தின் தேசிய இலக்கு. தற்போதுள்ள நீர் வழங்கல் திட்டங்களின் கொள்ளளவையும் தரத்தையும் மேம்படுத்தி நாடு முழுவதும் புதிய நீர் திட்டங்களை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொவிட் – 19 தொற்றுநோய் பரவிய போதும் கடந்த இரண்டு வருடங்களில் ஏனைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் 50 சதவீதத்துக்கும் அதிகமாக நீர் இணைப்புக்களை பொதுமக்களுக்கு வழங்க முடிந்துள்ளது. அதேபோன்று நீர் சுழற்சி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு அவசியமான நீர் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

கொவிட் தொற்றுநோயால் ஏற்பட்ட நிதி நெருக்கடியின் விளைவாக வளங்களைப் பெற்றுக்கொள்வதற்குள்ள வாய்ப்பு தடைப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கடந்த இரண்டு வருடங்களில் எமது அரசாங்கத்தின் அபிவிருத்தி முயற்சிகளின் கொள்கையான பங்கேற்பு அபிவிருத்திக் கோட்பாட்டைப் பயன்படுத்தி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கினோம் என்றார்.

இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர இந்த ஆரம்ப விழா மற்றும் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார்.

# யாழில் குடும்பஸ்தரிடம் சிலிண்டர், பணம் கொள்ளை

## ஒருவர் கைது; மூவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம் மாநகரில் எரிவாயு சிலிண்டரைக் கொண்டுசென்ற குடும்பத்தலைவரை வழிமறித்து பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் என அச்சுறுத்தி எரிவாயு சிலிண்டர் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுத் தப்பித்த நால்வரில் ஒருவர் சில மணிநேரங்களிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து எரிவாயு சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இந்த வழிப்பறிக்கொள்ளை இடம்பெற்றது.

வீதியில் சென்ற குடும்பத்தலைவரை மறித்த நால்வர் தம்மை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் எனத் தெரிவித்து அவரை மிரட்டி அவர் எடுத்துச் சென்ற எரிவாயு நிரப்பிய சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துத் தப்பிச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவம் இடம்பெற்று சில மணிநேரங்களிலேயே கந்தர்மடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டர் மற்றும் 25 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டன.

ஏனைய மூவரையும் கைதுசெய்ய தேடி வருகிறோம் என பொலிஸார் கூறினர்.

# பொருளாதாரத்தை மீட்பதாகக் கூறி சுகாதாரத் துறையை தனியார் மயமாக்குவதற்கு அரசு முயற்சிக்கிறது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

முழு சுகாதாரத் துறையையும் தனியார் மயமாக்க அரசாங்கம் முயற்சித்து வருவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் வைத்தியர் செனல் பெர்னாண்டோ –

நாட்டின் பொருளாதாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக சுகாதார அமைப்பு விரக்தியில் இருப்பதாகத் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை புத்துயிர் பெறவைக்கின்றோம் என்ற போர்வையில் சுகாதாரத் துறையை தனியார் மயமாக்க அரசாங்கம் முயற்சிப்பது தெளிவாகத் தெரிவதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தில் உள்ள சுகாதார அமைச்சர்கள் மற்றும் முந்தைய அரசாங்கங்களில்கூட நாட்டின் சுகாதார அமைப்பை அழிக்கும் சதித்திட்டங்கள் இருந்தன என்றும் அவர் கூறினார்.

எனவே, பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் போர்வையில் சுகாதார அமைப்பை தனியார்மயமாக்க அரசாங்கம் மேற்கொள்ளும் எந்தவொரு முயற்சிக்கும் எதிராக ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக பெர்னாண்டோ தெரிவித்தார்.

நாட்டின் சுகாதார அமைப்பை அரசாங்கம் வேண்டுமென்றே சிதைத்துவிட்டது என்றும் அவர் மேலும் கூறினார்.

# அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து 21 நிறைவேற்றப்படும் வரை அவதானம் செலுத்தமுடியாது

## திஸ்ஸ விதாரண திட்டவட்டம்



முழு நாட்டுக்கும் வினையாக அமைந்துள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் ஒருமித்த குரலாக உள்ளது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் வரை அரசாங்கம் ஆட்சியில் இருப்பது அவசியமானது. எனவே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் தற்போது அவதானம் செலுத்த முடியாது என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளைப் புறக்கணிக்க முடியாத நெருக்கடியான சூழ்நிலை திட்டமிட்ட வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ பொருளாதார நெருக்கடியைத் திட்டமிட்ட வகையில் தீவிரப்படுத்தி முழு நாட்டு மக்களையும் வீதிக்கிறக்கியுள்ளார்.

சமூகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த இருவார காலமாக நாடாளுமன்றம் கூடியது.

வாதப்பிரதிவாதங்கள்மாத்திரம்இடம்பெற்றுள்ளதே தவிர நடைமுறைக்குப் பொருந்தும் வகையில் எவ்வித தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தின் மீதான மக்களின் நம்பிக்கையும் குறைவடைந்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்ததுடன், மாற்றுத் திட்டங்களையும் அரசாங்கத்துக்கு முன்வைத்தோம்.

முன்வைக்கப்பட்ட யோசனைகள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. தற்போது சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு மாற்றுவழி இல்லை என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொருளாதாரநெருக்கடிக்குத்தீர்வுகாணவேண்டுமாயின் புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது அவசியம் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பதவி விலகுமாறு மகாசங்கத்தினர் உட்பட சிரேஷ்ட அரசியல்வாதிகள் வலியுறுத்தியுள்ளார்கள். இருப்பினும் அவர் பதவி விலக இதுவரையில் இணக்கம் தெரிவிக்கவில்லை.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அமைச்சரவைமீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை கிடையாது. அரச தலைவர் மீது நம்பிக்கை இல்லாத போது அவரது தீர்மானங்களில் மக்கள் எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? புதிய அமைச்சரவை நியமனத்தைத் தொடர்ந்து சமூக கட்டமைப்பிலான பிரச்சினைகள் தீவிரமடைந்துள்ளனவே தவிர குறைவடையவில்லை.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் முழுமையாக இரத்து செய்யப்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் ஒருமித்த கருத்தாக உள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாகத் தற்போது அவதானம் செலுத்த முடியாது. அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் வரையிலாவது தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருக்க வேண்டும். - என்றார்.

# அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை மீள அறிவிக்க ஏற்பாடு!

அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கான கட்டுப்பாட்டு விலையை மீண்டும் அறிவிக்க நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக அடுத்த வாரம் நிதி அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குணபால ரத்னசேகர தெரிவித்தார்.

எவ்வாறாயினும், டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி கட்டுப்பாட்டு விலையை மீள அமுல்படுத்துவதில் தடையாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இருப்பினும் நிதி அமைச்சருடனான சந்திப்பின் போது இந்த விடயம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படும் எனவும் குணபால ரத்னசேகர குறிப்பிட்டார்.

அரிசி, கோதுமைமா, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -05, பழையபூங்காவீதி, 79 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் V.N.யோன்பிள்ளை என ஆதன வரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

குறித்த ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு த.சோமசுந்தரம் முகதாவில் 14.10.1985 ஆம் திகதியிடப்பட்ட 1062 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கயித்தான் ஆசிர்வாதம் அவர்கள் யோசையா யோகராசாவுக்கு அறுதியாக விற்றுள்ளார். எனினும் குறித்த 1062 ஆம் இலக்க உறுதியில் தாயுறுதி இலக்கம் குறிப்பிடப்படாததுடன் இவ்வாதனம் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக வேறு எவருடைய குறுக்கிடும் தடையுமற்ற தனது ஆட்சியி லுள்ள தன் சொந்த ஆதனமாகும் என உறுதியில் கயித்தான் ஆசீர்வாதம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் பிரசித்த நொத்தாரிசு கணபதி சிவலிங்கம் முகதாவில் 10.10.1992 ஆம் திகதியிடப்பட்ட 8741 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் யோசையா யோகராஜாவும் பெண் அந்தோனிக்காம்மாவும் தனது மகள் ஜெஸ்மின் கலிஸ்ராவுக்கு வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளிகோவிற்பற்று, சுண்டிக்குளி இறை

"மாவிலங்கையடியில் புலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசிங்கம் என்பவர் 19.08.1985 ஆம் திகதியில் அளந்து வரைந்த 533 ஆம் இலக்கபடத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 1.30 இதில் தென்கிழக்குப் புறமாக அளந்து பிரிவிட்ட குளி பதினாறு தசம் மூன்றும் (குளி 16.03) மலசலகூடமும் கட்டிக் கொடுக்கப்படும் குசினியம் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும், இதனெல்லை.

**கிழக்கு - பழையபூங்கா வீதி**
**வடக்கு - இதன் மிகுதி ஆதனம்**
**மேற்கு - இதன் மிகுதி ஆதனம்**
**தெற்கு - கையொழுங்கை**

இவ்வெல்லைப்படி இதடங்கலும் இதற்கும் சேர்ந்தவைகளும்

தற்போது இவ்வாதனத்தை யோசெப் அன்ரனி யேசுநாயகம் மணவாட்டி ஜெஸ்மின் கலிஸ்ரா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ் ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது யேசுநாயகம் யோசப்பும் ஜெஸ்மின் கலிஸ்ராவும் என்றும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்,**
**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

# பயணிகளின் எண்ணிக்கை ரயில் நிலையத்தில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 25

பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டமையை அடுத்து ரயில்வேத் திணைக்களத்துக்கான வருவாய் அதிகரித்துள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்துள்ளார்.

ரயில் கட்டணம் அதிகரிக்கப்படாததால் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# அதிகாரங்களை ஜனாதிபதியிடம் கொடுத்து விட்டு நாடாளுமன்றத்தில் தீர்வை எதிர்பார்க்க இயலாது

## கிரியெல்ல கருத்து



அதிகாரங்கள் அனைத்தையும் 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியிடம் வழங்கிவிட்டு நாடாளுமன்றத்திடம் தீர்வை எதிர்பார்ப்பது பொருத்தமற்றது.

நாடாளுமன்றத்திடம் தற்போது எந்த அதிகாரங்களும் இல்லை என்பதால் அங்கு வாதப்பிரதிவாதங்களை முன்னெடுப்பதும் பிரயோசனமற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நல்லாட்சியில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் அதிகாரங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நாடாளுமன்றத்துக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

ஆனால் 20 ஆவது திருத்தத்தின் ஊடாக நாடாளுமன்ற அதிகாரங்கள் மாத்திரமன்றி நீதித்துறை மற்றும் அரச சேவை ஆணைக்குழு உள்ளிட்டவற்றின் அதிகாரங்கள் கூட ஜனாதிபதி வசமாக்கப்பட்டன.

இதனால் தற்போது நாடாளுமன்றத்திடம் எந்தவொரு அதிகாரமும் இல்லை. நாடாளுமன்றம் பலமற்றதாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதிக்கு வழங்கிவிட்டு, சபாநாயகர்நாடாளுமன்றத்திடம் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கோருவது நகைப்பிற்குரியது.

சீனா எமக்கு கடன் உதவிகளை வழங்குகின்ற போதிலும், எமது ஏற்றுமதிகளைப் பெற்றுக் கொள்வதில்லை. ஆனால் இலங்கையின் 70 சதவீதமான ஏற்றுமதிகளை ஐரோப்பிய நாடுகள் பெற்றுக் கொள்கின்றன.

எவ்வாறிருப்பினும் அரசாங்கம் இவ்வாறான நாடுகளுடன் தொடர்புகளைப் பேணாது, கடன் வழங்கும் நாடுகளுடன் மாத்திரமே கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறது. இதன் காரணமாகவே சர்வதேசத்தின் உதவிகளும் கிடைக்காமலுள்ளன.

இவ்வாறு நாட்டில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவது பிரயோசனமற்றது. காரணம் நாடாளுமன்றத்திடம் எந்தவொரு அதிகாரமும் கிடையாது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நிறைவேற்று அதிகார முறை நீக்கத்துடன் 13 ஐயும் இல்லாமல் ஆக்க நாம் விடோம்

# கண்களை விற்று சித்திரம் வாங்க நாம் என்றைக்கும் தயார் இல்லை

## உயிரைக் கொடுத்து போராடுவோம் என்கிறார் மனோ



நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அகற்றப்படுமானால், 13 ஆம் திருத்தம் அதனோடு மாகாணசபைகளும், அதனோடு விகிதாரசார தேர்தல் முறைமையும் போக வேண்டும் என்ற கருத்து அரங்குக்கு மெல்ல வருகிறது. இது ஆபத்தானது. கண்களை விற்று சித்திரம் வாங்க நாம் தயார் இல்லை. அரசமைப்பை திருத்துகிறோம் என்ற போர்வையில், இன்றைய அரசமைப்பின் கீழ் இருக்கும் இந்த குறைந்தபட்ச உரிமைகள் மீது, எவரும் கை வைத்தால், அதற்கு எதிராகத் தமிழ் முற்போக்கு கூட்டணி உயிரை கொடுத்து போராடும்.

வடக்கு கிழக்கின் ஏனைய தமிழ் கட்சிகளும், முஸ்லிம் கட்சிகளும் இந்த இரண்டு விவகாரங்கள் தொடர்பில் தமது நிலைப்பாடுகளைப் பகிரங்கமாக அறிவித்தால், ஒட்டு மொத்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடுகளை நாம் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்கலாம் என ஜனநாயக மக்கள் முன்னணி – தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அரசில் இருந்து விலகி விட்டதாக கூறும் இரத்தின தேரர் 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அகற்றப்படுமானால், 13 ஆம் திருத்தம் அதனோடு மாகாணசபைகளும், அதனோடு விகிதாரசார தேர்தல் முறைமையும் போக வேண்டும்' என, கட்சி தலைவர்கள் கூட் டத்தில் கூறினார்.

அவரை இறுக்கமாக இடைமறித்து 'எந்த அரசமைப்பு திருத்தம் வந்தாலும், விகிதாசார தேர்தல் முறைமை, 13 ஆம் திருத்தம் என்ற குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கல் ஆகியவற்றின் மீது கைவைக்க நாம் விட மாட்டோம்.' என்று நான் பதில் சொன்னேன். இந்த நிலைப் பாட்டிலேயே ஐக்கிய மக்கள் கூட்டணியின் சகோதர பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகியவையும் உறுதியாக இருக்கின்றமையை அந்தக் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்த பிக்குஎம்பியின் இந்நிலைப்பாடு அங்கு வேறு சிலரின் மனதுகளுக்குள்ளும் ஒளிந்து இருப்பது எனக்குத் தெரியும். கடந்த சில தினங்களாக நடைபெறும் கட்சித் தலைவர்கள் கலந்துரையாடல்களில், இந்தகருத்து நேரடியாகவும், மறைமுகமாகவும், பல பெரும்பான்மைக் கட்சி அரசியல் கட்சி தலைவர்களால், பிரதிநிதிகளால் கூறப்பட்டது.

இதுபற்றிய பேச்சு, கட்சித் தலைவர் கூட்டத்தில் மீண்டும் வந்தது. நான் மீண்டும் சொன்னேன். விகிதாசார தேர்தல் முறைமை, மாகாணசபைகளை அகற்றித்தான் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அகற்ற முடியுமென்றால், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்ற வேண்டாம். 20 ஆம் திருத்தத்தை முழுமையாக அகற்றி 19 ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவோம். அதில் ஜனாதிபதி படுபலவீனமாகி விடுவார்.

அதை விடுத்து, விகிதாசாரத் தேர்தல் முறைமை, 13 ஆம் திருத்தம் என்ற குறைந்தபட்ச அதிகாரப் பரவலாக்கல் ஆகியவற்றின் மீது கை வைத்தால், அதற்கு எதிராக நான் என் உயிரைக் கொடுத்தாவது போராடுவேன். என்று கட்சி தலைவர்கள் கூட்டத்தில் நான் கூறியுள்ளேன். மேலும் இருக்கும் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதை விடுத்து, மேலும் புதிய பிரச்சினைகளை உருவாக்க வேண்டாம் என சபா நாயகரிடம் நான் கூறினேன்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இதுபற்றிய தன் கருத்தை முதல்நாள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மிகத் தெளிவாக அறிவித்தார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முழுமையாக அகற்ற வேண்டும் என நாம் சொன்னாலும், விகிதாசாரத் தேர்தல் முறைமையையும், 13 ஆம் திருத்தத்தையும் மாற்ற நாம் உடன்பட மாட்டோம். இவை தொடர்பாக எங்கள் பங்காளிக் கட்சிகளுக்கு நாம் உறுதியளித்துள்ளோம். – என்று சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பாகக் கூறினார். இது ஒரு தேசியக் கட்சி – கூட்டணி ஒன்றின் தலைவரின் மிக முற்போக்கான நிலைப்பாடாகும்.

13 ஆம் திருத்தம் தொடர்பில் தமக்கு அக்கறை இல்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நண்பர் கஜேந்திரகுமார் எம்.பி. என்னிடம் கூறியுள்ளார். ஆனால், விகிதாசார தேர்தல் முறைமையும், ஏதோ ஒருவகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் தொடர வேண்டுமென்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆம் திருத்தம் மூலமான மாகாண சபைகள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல, முழு நாட்டிலும் ஒன்பது மாகாணங்களிலும், குறிப்பாக மத்திய, மேல், சப்ரகமுவ, ஊவா மாகா ணங்களிலும் உள்ளன. ஆகவே, அதுபற்றிய தமிழ் முற்போக்கு கூட்டணியின் நியாயமான நிலைபாட்டை வடக்குக் கிழக்கு தமிழ்க் கட்சிகள் புரிந்துகொண்டிருக்கின்றன என நான் நினைக்கிறேன்.

கட்சத்ஸ்ரீ தலைவர்கள் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதியாக கலந்துக்கொள்ளும் நண்பர் சுமந்திரன் எம்.பி, விகிதாசார தேர்தல் முறைமை, 13 ஆம் திருத்தம் ஆகியவை தொடர்பில் எமது நிலைப்பாடுகளுடன் உடன்படுகிறார் எனக் கூறுகிறார். ஆனால், அவரது சில கருத்துகள், 'விகிதாசார தேர்தல் முறைமை, 13 ஆம் திருத்தம்' ஆகியவற்றை தேசிய தளத்தில் தேவையற்ற சிக்கல்களில் கொண்டு போய் மாட்டி விடுமோ என்ற சந்தேகம் எனக்குள் ஏற்பட்டுள்ளது. ஆகவே இத்தகைய தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்த இரண்டு விவகாரங்கள் தொடர்பில் தமது இன்றைய தெளிவான நிலைப்பாடுகளை அறிவிக்கக் கோருகிறேன்.

வடக்கு கிழக்கின் ஏனைய தமிழக்; கட்சிகளும் இந்த இரண்டு விவகாரங்கள் தொடர்பில் தமது நிலைப்பாடுகளைப் பகிரங்கமாக அறிவித்தால், ஒட்டு மொத்த தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நிலைப்பாடுகளை நாம் அரசமைப்பு திருத்தம் தொடர்பில் நாட்டுக்கு அறிவிக்கலாம். – என்றார்.




## பொருள்களின் விலை ஏற்றத்தினை கண்டித்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

நாட்டில் பொருள்களின் விலை அதிகரிப்பிற்கு கண்டனம் தெரிவித்து வவுனியா பூந்தோட்டம் பகுதியில் மாபெரும் ஆர்பாட்டமும் கடை அடைப்பு போராட்டம் ஒன்றும் நேற்று (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

பூந்தோட்டம் வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மேற்படி போராட்டத்தில் பொதுமகள் அயல் கிராமத்தவர்கள், இளைஞர்கள், பெண்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

மேலும் நாட்டில் பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக இன்று அனைத்து மக்களும் கடும் பாதிப்புக்களை சந்தித்து வருகின்றமையோடு குழந்தைகள் பட்டினியால் வாடும் நிலைக்கு தள்ளப்பட்டுளோம் எனவும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசு உடனடியாக பதவிவிலக வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு 72 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது!

நாட்டின் சில பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 72 வீதமாக அதிகரித்துள்ளது.

நீர்ப்பாசனத்திணைக்களத்தின் நீர் முகாமைத்துவ பணிப்பாளர் டி அபேசிறி வர்தன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

ராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரண்டு கதவுகள் தலா 3 அடியாலும், மேலும் இரண்டு கதவுகள் தலா 2 அடிகளாலும் திறக்கப்பட் டுள்ளன எனவும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

நுவரவெள, நச்சு டுவ வெள, மஹவிலச்சிய வெள மற்றும் யான் ஓயா ஆகிய நீர்த் தேக்கங்கள் அதிகபட்ச கொள் ளளவை எட்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## திருமண மண்டபக் கட்டணங்கள் 40 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது

*திருமண நிகழ்வு மண்டபம் மற்றும் அது தொடர்பான ஏனைய கட்டணங்களை 40 வீதம் அதிகரிக்க அகில இலங்கை விருந்து மண்டபம் மற்றும் உணவு வழங்கல் சங்கம் தீர்மானித்துள்ளது.*

*அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் அதுல களுஆராச்சி தெரிவித்துள்ளார்.*

*இருப்பினும், ஏற்கனவே செய்யப்பட்ட முன்பதிவுகளுக்கு இது பொருந்தாது என்றும் புதிய முன்பதிவுக்கு மட்டுமே 40 வீத உயர்வு பொருந்தும் என்று அவர் கூறினார்.*

# ஆளும் வர்க்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கை; உழைக்கும் மக்கள் தண்டிக்கப்படுகிறார்கள்

## சமத்துவ மாற்றத்தை வலியுறுத்தும் மே தின அறை கூவல் அறிக்கையில் சந்திரகுமார்



வரலாறு சந்தித்திராத பொருளாதார நெருக்கடியை நாட்டு மக்களின் மீது ஆளும் வர்க்கம் மாற்றியுள்ளது. இதனால் தங்கள் அளப்பரிய பங்களிப்பை நாட்டுக்காகச் செலுத்துகின்றபோதும் உழைக்கும் மக்கள் அநியாயமாகத் தண்டிக்கப்படுகிறார்கள். உணவுக்கே வழியற்ற ஆபத்தான நிலையை நோக்கி நாடு சென்று கொண்டிருக்கிறது. ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குப் பொருத்தமான, நிலையான தீர்வைக் காண்பதற்கு நீண்டகால வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் இதுவரை பெரிதாக முயற்சிக்கவில்லை. என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் மு.சந்திரகுமார் விடுத்துள்ள மேதின அறை கூவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மாற்றமொன்றைக் கோரும் வகையில் மாற்றத்துக்கான சமத்துவ மேதின அறைகூவலை விடுக்கிறோம் என சமத்துவக் கட்சி மேதினம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு உடனடி மீட்பு உத்திகளாக, அயல் மற்றும் நட்பு நாடுகளிடம் கடன் கேட்பது, ஐ.எம்.எவ்விடம் நிதியுதவி பெறுவது என்பதோடு அரசு மிக மெதுவாகவே பொறுப்பற்று இயங்குகிறது. இந்த அநீதியையும் தவறான அரசியற் போக்கையும் கண்டிப்பதோடு, வளமுடைய இலங்கைத்தீவு ஒரு காலம் ஆசியப் பிராந்தியத்தில் பலருக்கு ஆச்சரியமான வகையில் சிறப்பான பொருளாதார வலுவோடிருந்தது. எல்லையற்ற இனவாதத்தின் விளைவாக உருவான போர், திறந்த பொருளாதாரக் கொள்கை, கட்டற்ற ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்றவற்றினால் இன்று நாடு சீரழிந்து கடன் பொறியில் சிக்கி, சமாளித்துக் கொள்ள முடியாத அளவுக்கு தள்ளாடிக் கொண்டிருக்கிறது. உணவுப் பொருள்களிலிருந்து எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் வரை எல்லாமே உச்சமான விலை உயர்வை எட்டியுள்ளன.

அத்துடன் எல்லாப் பொருள்களுமே தட்டுப்பாடாகவும் உள்ளன. இதனைத் தாங்கிக் கொள்ள முடியாத மக்கள் இன்று நாட்டிலும் நாட்டுக்கு வெளியிலுமாக போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களோடு இணைந்து நாமும் உழைக்கும் மக்களின் இந்த (மே 01) நாளில் மாற்றத்துக்கான சமத்துவ மேதின அறைகூவலை விடுக்கின்றோம்.

போர் முடிந்த பிறகு நாட்டிலே அமைதியும் பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும் என்று நம்பப்பட்டது. ஆனால், இன்று ஏற்பட்டிருக்கும் நிலைமையோ இந்த நம்பிக்கைக்கு முற்றிலும் எதிரானதாயிருக்கிறது. சர்வதேச அரங்கில், குறிப்பாக ஆசிய பிராந்தியத்தில் இலங்கை பெற்றிருக்கக் கூடிய முக்கியத்துவம், தற்போதைய பொருளாதார – அரசியல் நெருக்கடிகளால் கேள்விக்குறியாகியுள்ளது. தேசத்தின் மூலோபாய பிரதேசங்கள் அந்நிய சக்திகளின் ஆளுகையின்கீழ் செல்லக்கூடிய ஆபத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

நாட்டை "இக்கட்டில் இருந்து காப்பாற்றக்கூடிய பொருளாதார உதவிகள்" – என்ற போர்வையில் சில நாடுகளால் போடப்படும் தூண்டில்கள், தேசத்தின் இறைமையைப்பலவீனப்படுத்துகின்றன. பன்னாட்டு நிதிநிறுவனங்கள் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் கொடுக்கக்கூடிய அழுத்தங்கள், ஏற்கனவே நடைமுறையில் உள்ள கல்வி, சுகாதாரம், பொது நல துறைகளைக் கையறு நிலைக்கு இட்டுச்செல்லும் அபாய நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் மெய்யான மாற்றத்தைக் காண வேண்டுமாயின், அதிகாரத் தரப்புகளிலிருந்து மக்கள் வரையில் இனவாதக் கருத்துநிலையைத் தளர்த்தவேண்டும். பிற சமூகங்களிடையே நல்லிணக்கத்தைப் பேணி, புதிய பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்து நாட்டை தற்சார்புப் பொருளாதாரத்தில் வலுப்படுத்த வேண்டும். நாட்டின் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும். உடனடி மீட்பு உத்திகளாக, அயல் மற்றும் நட்பு நாடுகளிடம் கடன் கேட்பது, ஐ.எம்.எவ்விடம் நிதியுதவி கேட்பது போன்ற சமாளிப்பு நிகழ்ச்சிகளை விட்டு விட்டு மக்கள் நலன் அரசாட்சியை உருவாக்கவேண்டும். இதை யெல்லாம் உடனடியாக அதிகார வர்க்கமோ ஆட்சியாளர்களோ செய்துவிடப்போவதில்லை. மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மூலமே நல்ல மாற்றத்துக்கான சாத்தியங்களை உருவாக்க முடியும்.

இன்று வரலாறு கண்டிராத வகையில் தீர்க்கதரிசனமில்லாத தலைமைத்துவம், முன்னுதாரணமில்லாத கொள்கைகள், இனப்பன்மைத்துவத்தை இல்லாதொழிக்கும் சட்டங்கள், வரலாறு காணாத ஊழல்கள் என தேசத்தின் ஆன்மாவை சிதைத்து நிற்கும் ஆளும்வர்க்கத்தை, பரிபூரணமாக அரசியல் அரங்கிலிருந்து துடைத்தெறிய, மக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் உருவாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மெய்யான மாற்றத்தைக் காணும் மக்கள் எழுச்சிப்போராட்டமாக இந்த மே நாள் எழுச்சியை வடிவமைப்போம். இதற்காக அனைவரும் ஒன்றிணைவோம். சமத்துவ மாற்றத்துக்கான குரலை மே நாளில் உயர்த்துவோம் என சமத்துவக் கட்சியின் மே தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நபர் ஒருவர் சுட்டுக் கொலை

பெலியத்த, தார பெரிய, நிஹிலுவ பிரதேசத்தில் நபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சனிக்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவரால் இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் நிஹிலுவ பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதானவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேற்படி நபரின் வீட்டில் வைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவத் தயார்!

### சர்வதேச நாணய நிதியம் உத்தரவாதம்

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க உதவுவதற்குத் தயாராக உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதற்கான பேச்சுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவுள்ளன என அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

நிதியமைச்சர் அலி சப்ரி தலைமையிலான தூதுக்குழுவினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து சர்வதேச நாணய நிதியம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

அத்துடன், பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக இலங்கை அதிகாரிகளுடன்சுமுகமானபேச்சுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன எனவும் அந்த நிதியம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வைக்காண்பதற்காக ஏனைய அனைத்து தரப்பினருடன் இணைந்து செயற்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

## இரும்பு வேலிகளாக மாறும் கொழும்பு பிரதான வீதிகள்

கொழும்பில், அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் ஒன்றை நேற்று(ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், கொழும்பின் பிரதான இடங்களுக்குச் செல்லும் வீதிகளில் நிலையான இரும்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை அவ்வழியாக பயணிக்க வேண்டிய பஸ்கள், வேறு வழிகளுக்கு திருப்பிவிடப்படுகின்றமையோடு நடந்து செல்வோர் கூட இரும்பு வேலிக்குள் நுழைய முடியாத அளவில், மிக நெருக்கமாக இரும்புகள் கட்டப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை, யோர்க் வீதி, வங்கி வீதி உள்ளிட்ட இடங்களிலேயே வீதிகளை முழுமையாக மறைத்து இவ்வாறு கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## திருமலை ராஜவந்தான் மலைக்கு வழிபாட்டுக்கு சென்ற தமிழர்கள் பிக்குவால் தடுத்துநிறுத்தம்

திருகோணமலை மூதூர் 64 ஆம் கட்டையில் உள்ள ராஜவந்தான் மலைக்கு நேற்று (ஞாயிற்றுக் கிழமை) காலை தமிழ் மக்கள் மற்றும் சைவ மதகுருக்கள் வழிபாடுகளில் ஈடுபடுவதற்காகச் சென்றபோது பௌத்த பிக்கு ஒருவர் வீதியை மறித்து மக்களைத் தொடர்ந்து செல்லவிடாது தடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன்அங்கு சென்றமக்களை இனவாதத்தைத் தூண்டும் விதத்தில் மிகவும் கீழ்த்தரமாக பேசியும் அவர்களின் தொலைபேசிகளைப் பறித்து எறிந்தும் அடாவடியில் அவர் ஈடுபட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதன் போது அங்கு நின்ற பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்களும் மக்களை அச்சுறுத்தும் விதமாகப் படங்களையும் எடுத்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜவந்தான் மலையின் கீழ் சகாயபுரம் (வெட்டுக் காட்டுச்சேனை) மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது.

அத்துடன், அந்தப் பிரதேச மற்றும் அயல்பிரதேச மக்கள் மலைக்குச் சென்று வழிபட்டுவந்த நிலையில், மூன்று வருடங்களுக்கு முன்னர் மலையின் மேல் இருந்த வழிபாட்டிடம் அழிக்கப்பட்டு, அங்கு பௌத்த சின்னங்களை நிறுவும் வேலைகள் நடைபெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மண்மேடு விழுந்து ஒருவர் உயிரிழப்பு!

கண்டி கழிவு நீர் திட்டத்தில் பணிபுரிந்த தொழிலாளி ஒருவர் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை ) கண்டி போகம்பர பகுதியில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது .

குறித்த தொழிலாளி கண்டி தேசிய வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நுட்பியல் அவத்தை


ஜனனி தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)



ரஷ்யாவின் மிக முக்கிய போர்க்கப்பல் குறிப்பாக கருங்கடல் கடற்படையின் முதன்மையான கடல் பாதுகாப்பு கலமான 'மொஸ்க்வா ஏவுகணை கப்பல்' கருங்கடலில் மூழ்கியுள்ளது

1970 களில் சோவியத் யூனியனில் அப்போது உலகம் பனிப்போரில் சிக்குண்டிருந்த காலம், அதன் போது இந்தக்கப்பல் வடிவமைக்கப்பட்டது, இது அமெரிக்க விமானம் தாங்கி கப்பல்களை அழிக்க வடிவமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. நாற்பது ஆண்டுகளாக ரஷ்ய கடற்பாதுகாப்பின் முக்கிய பங்காற்றிய கப்பல் ரஷ்ய உக்ரேனியப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் கருங்கடலில் மூழ்கியுள்ளது. இந்தச் செய்தி வெளியான அதே நேரம், டைட்டானிக் கப்பல் விபத்தில் சிக்கி மூழ்கிய 110ஆவது ஆண்டு நிறைவு செய்தியும் கிடைக்கின்றது. இங்கிலாந்தின் சௌத்தாம்ப்டனில் இருந்து அமெரிக்காவின் நியூயோர்க்கிற்கு மணிக்கு 41 கிலோமீற்றர் வேகத்தில் சென்று கொண்டிருந்த டைட்டானிக் கப்பல் 1912 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 மற்றும் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட இரவில் பனிப்பாறையுடன் விபத்துக்குள்ளாகி மூன்றே மணிநேரத்தில் அட்லாண்டிக் பெருங்கடலில் மூழ்கியது.

மூழ்குவதற்கு வாய்ப்பே இல்லை என்று கூறப்பட்ட இந்தக் கப்பல் மூழ்கியது. இந்த விபத்தில் சுமார் 1,500 பேர் உயிரிழந்தனர். 110 ஆண்டுகள் கடந்த பின்னரும் இது மிகப்பெரிய கடல் விபத்தாக கருதப்படுகிறது.




இந்த டைட்டானிக் விபத்து கடல்பயணத்தில் மனித குலப்பாதுகாப்புக்கான நுட்பியல் அவத்தை பற்றிய சிந்தனையைத் தூண்டி கடற்பயணத்துக்கான பாதுகாப்பு தொடர்பான நுட்பியல் அவத்தையின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறது.

கப்பல்களின் பாதுகாப்பை பொறுத்தவரையில் டைட்டானிக் விபத்து சம்பவம் ஒரு முக்கிய படிப்பினையாக அமைந்தது. கப்பல்களின் பாதுகாப்பிற்காக ஒரு நுட்பியல் அவத்தைக் கட்டமைப்பின் தேவையை உணர்த்தியது. டைட்டானிக் விபத்து நடந்த போது கப்பல் பயணத்தில் பனிப்பாறைகளைக் கண்டறிய கண்ணால் பார்ப்பதை சார்ந்தே எல்லாம் இருந்தது. கப்பல் பயணத்தின் போது பனிப்பாறை போன்றவை நெருங்கி வருவதைப் பார்த்து எச்சரிக்கை செய்ய ஒரு மாலுமி உயரத்தில் அமர்த்தி வைக்கப்படுவார். அவர் பார்த்து எச்சரிப்பார். ஆனால் கப்பல் அதிக வேகத்தில் செல்லும்போது இந்த முறை பாதுகாப்பானதாக இருக்காது அதனால் தான் டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளானது. இதன் பின்னர் பனிப்பாறை போன்றவற்றை முன்கூட்டியே கண்டறிய ரேடர் மற்றும் சோனார் நுட்பியல் அவத்தை கண்டறியப்பட்டது. இதன் பயனாக பனிப்பாறைகளை மிகவும் முன்னதாகவே கண்டறிகின்றனர். இது கடல் பயணங்களின் போது கடல் மேப்பிங் அல்லது பயண விளக்கப்படங்கள் அனைத்தும் நவீன வடிவத்தில் கிடைக்க வழிவகுத்தன. இந்த நுட்பியல் அவத்தை பற்றிப் பார்க்கலாம்.

Radio Detection And Ranging (RADAR) என்றும் Sound Navigation and Ranging (SONAR) என்றும் குறிப்பிடப்படுகின்றன. ரேடர் மற்றும் சோனார் ஆகிய இரண்டும் முக்கியமாக இராணுவ, அறிவியல் மற்றும் வணிக பயன்பாடுகளுடன் தொடர்புடைய தொலைநிலை உணர்திறன் அமைப்புகளாகும். ரேடர் மின்காந்த அலைகளை அனுப்புகிறது, அதே நேரத்தில் சோனார் ஒலி அலைகளை அதாவது ஒலியைக் கடத்துகிறது. இரண்டு அமைப்புகளிலும் அலைகள் இலக்குகளிலிருந்து எதிரொலிகளை பெறுவதன் மூலம் நடைபெறுகின்றன. அவை இலக்கின் முக்கியமான பண்புகளை, அதாவது வடிவம், அளவு, வேகம், தூரம் போன்றவற்றைத் தீர்மானிக்க உதவுகின்றன. மின்காந்த அலைகள் தண்ணீரில் கடத்தப்படுவது குறைவாக இருப்பதால், ரேடர் சிக்னல்கள் பெரும்பாலும் தரை அல்லது வளிமண்டல கண்காணிப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சோனார் சிக்னல்கள் நீரை எளிதில் ஊடுருவிச் செல்வதால், அவை நீருக்கடியில் வழிசெலுத்துவதற்கும் அளவீடு செய்வதற்கும் ஏற்றதாக இருக்கின்றது.

இவை கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னர் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக, நீரில் ஒலியைக் கண்டறிய இயந்திரமற்ற நீருக்கடியில் கேட்கும் சாதனங்கள் (கேட்கும் குழாய்கள்) பயன்படுத்தப்பட்டன. 1882 ஆம் ஆண்டிலேயே, சுவிஸ் நாட்டு விஞ்ஞானி டேவல் கொலாடன் ஜெனிவாவில் உள்ள ஏரியின் ஆழத்தை அறிய ஒலியின் வேகத்தைப் பயன்படுத்த முயன்றார்.

இதன் பின்னர் டைட்டானிக் பேரழிவை அடுத்து, லாங்கெவினும் அவரது சகாவான கான்ஸ்டான்டின் சிலோவ்ஸ்கியும், அப்போது சுவிட்சர்லாந்தில் வசித்து வந்த ரஷ்ய பொறியியலாளர், 'ஹைட்ரோஃபோன்' என்று அழைக்கப்படுவதை கப்பல்கள் பனிப்பாறைகளை மிக எளிதாகக் கண்டறியும் ஒரு பொறிமுறையாக உருவாக்கினர். இதன் மூலம் எந்தப் பனிப்பாறையின் பெரும்பகுதி கீழே உள்ளது. எந்தப் பனிப்பாறையின் பெரும் பகுதி கடல் மேற்பரப்புக்கு மேலேயுள்ளது போன்றவற்றைக் கண்டறிய முடியும். நீர்மூழ்கிக் கப்பல்கள் நீருக்கடியில் பயணிப்பதற்கு இதே போன்ற அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன.

எதிரொலியின் மூலம் பெறப்பட்ட சமிக்ஞைகள் அல்லது அலைகள் பண்புகளை அடையாளம் காண



தட்டச்சு செய்யப்படுகின்றன. இதனை இயக்கும் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்தவர்களினால் நல்ல முடிவுகளைப் பெற முடியும்.

நீர்மூழ்கிக் கப்பல்களின் அறிமுகம் SONAR மற்றும் பிற எதிரொலி கண்டறிதலின் வளர்ச்சியை அவசரப்படுத்தியது. பின்னர், மின் ஆற்றலை ஒலி அலைகளாக மாற்றும் ஒலி மாற்றியின் வளர்ச்சியானது சோனார் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பத்தில் விரைவான முன்னேற்றத்தை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரின் ஆரம்பப் போர்களின் போது, பிரிட்டிஷ் நீர்மூழ்கிக் கப்பல்கள் தமது எதிர்ப்பைக் கண்டறிய இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சோனார் வளர்ச்சிகள் தொடர்ந்தாலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜேம்ஸ் கிளார்க் மேக்ஸ்வெல் (1831 - 1879) கண்டறிந்த மின்காந்த கதிர் வீச்சின் இயல்பு மற்றும் பரவல் பற்றிய மேம்பட்ட புரிதலின் அடிப்படையில் தொலைநிலை உணர்திறன் அமைப்பு உருவாக்கப்பட்டது.

1920கள் மற்றும் 1930களின் வானிலை நிபுணருமான சர் ராபர்ட் அலெக்சாண்டர் வாட்சன் - வாட் (1892 - 1973) இடியுடன் கூடிய மழையின் திசையைக் கண்டறிய குறுகிய அலை வானொலி ஒலிபரப்புகளை வெற்றிகரமாகப் பயன்படுத்தினார். இதனைத் தொடர்ந்து ரேடியோ அலைகளின் சுருக்கமான துடிப்புகளை மேல்நோக்கி அனுப்புவதன் மூலம் அயனோஸ்பியரின் (மேல் வளிமண்டலத்தில் உள்ள அடுக்கு) உயரத்தை அளவிட்டனர். இந்த அளவீடுகள் உயரத்தின் மிகத் துல்லியமான தீர்மானங்களை வழங்கின.

பின்னர் இந்த நுட்பியல் அவத்தை மூலம் தொலைவில் உள்ள விமானங்களைக் கண்டறிய ஆரம்பித்தனர். இந்த நுட்பியல் வசதி மூலம் தரை மூடுபனி அல்லது மேகங்களைப் பொருட்படுத்தாமல் விமானங்களைக் கண்டறிய முடியும், இரண்டாம் உலகப் போரின் போது ஜேர்மன் நாசி விமானங்களை கண்டறிவதில் இந்த நுட்பியல் அவத்தை முக்கிய பங்கு வகித்தது.




இரண்டாம் உலகப்போர் முடிவில் பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் படைகள் பல ரேடர் வகைகள் மற்றும் பயன்பாடுகளை உருவாக்கியிருந்தனர். முதலாம் உலகப் போரின் போது உருவாக்கப்பட்ட ரேடர் தொழில்நுட்பம், ரேடியோ வானியலின் வளர்ந்து வரும் அறிவியலில் வியத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியது. இது இருபதாம் நூற்றாண்டின் கடைசி பாதியில் அல்ட்ராசவுண்ட் போன்றன மருத்துவ நடைமுறைகளின் வளர்ச்சிக்கு அடித்தளமிட்டன. ஒலி மற்றும் மின்காந்த சமிக்ஞை அடிப்படையிலான தொலைநிலை உணர்திறன் தொழில்நுட்பங்கள், சக்திவாய்ந்த மருத்துவ கருவிகளாக மாறியன. இது நோயாளிக்கு துல்லியமான நோயறிதலைச் செய்ய மருத்துவர்களுக்கு உதவியது.

RADAR மற்றும் SONAR போன்ற ரிமோட் சென்சிங் கருவிகள் பூமி மற்றும் சூரிய குடும்பத்தில் உள்ள பொருள்களின் நிலப்பரப்பு மற்றும் மேற்பரப்பு அம்சங்களை வரைபடமாக்குகின்றன. சோனார் அளவீடுகள் நீருக்கடியில் நில அதிர்வு வரைபடத்திற்கு உதவுகிறது. இது கடல் தளங்களை வரைபடமாக்குவதற்கும் கனிம, வளங்களை அடையாளம் காண்பதற்கும் உதவுகிறது.

இன்று, ரேடர், சோனார் அமைப்புகள் நவீன கப்பலோட்டத்திற்கும், விமான ஓட்டத்திற்கும் முக்கியமான நுட்பியலாகச் செயற்படுகின்றன. இது விமான, கப்பல் போக்குவரத்து கட்டுப்பாட்டு அமைப்பில் முக்கிய அங்கமாக உள்ளது.

# வெளிமாவட்டங்களுக்கு செல்லாமல் யாழில் 900 ஆசிரியர்கள் உள்ளனர்!

## பலர் அரசியல்வாதிகளிடம் படையெடுப்பு

யாழ்.மாவட்டத்திலுள்ள தீவகம் தவிர்ந்த 4 வலயங்களிலும் சுமார் 900 ஆசிரியர்கள் இதுவரை வெளி மாவட்டங்கள் செல்லாமல் யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்தும் சேவை ஆற்றுகின்றனர் என அறியக் கிடைத்துள்ளது.

யாழ்.வலயம், வலிகாம வலயம், தென்மராட்சி மற்றும் வடமராட்சி வலயங்களிலேயே குறித்த ஆசிரியர்கள் தொடர்ச்சியாக வெளி மாவட்டங்கள் செல்லாமல் கடமையாற்றி வருகின்றனர்.

தற்போது ஆசிரியர் இடமாற்றத்துக்கு வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் குறிப்பாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு வருகை தருவதாக சுமார் 274 பேர் வரை பணி இடமாற்றம் கோரி விண்ணப்பம் செய்திருக்கின்றனர் என அறிய முடிகிறது.

எனினும் யாழ்.மாவட்டத்திலிருந்து 7 வருடங்களைத் தாண்டியவர்களுக்கு வெளிமாவட்ட இடமாற்றம் வழங்கப்படவுள்ள நிலையில், பலர் அரசியல்வாதிகளையும் உயர் அதிகாரிகளையும் நாடத் தொடங்கியுள்ளனர்.

வெளி மாவட்டங்களில் தொடர்ச்சியாக ஏழு வருடங்களுக்கு மேலாக ஆசிரியராக உள்ளவர்கள் இதுவரை தமது சொந்த இடங்களுக்குத் தற்போது திரும்புவோம் என எதிர்பார்த்துக் காத்திருக்கும் நிலையில், அவர்களின் ஆசைகள் நிறைவேறுமா? என்பதில் பல சந்தேகங்கள் எழுகின்றன.

ஏனெனில் யாழ்.மாவட்டத்திலுள்ள வலயங்களில் சில பாடங்களுக்கு மேலதிகமான ஆசிரியர்கள் இருக்கும் நிலையில், அவர்களை ஒத்த பாடத்துக்கு வருகை தரும் ஆசிரியர்களைக் கடமைக்கு அமர்த்துவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

ஆகவே, ஆசிரியர் இடமாற்றம் என்பது சகலருக்கும் பொதுவாகக் காணப்படுகின்ற நிலையில், அரசியல் அழுத்தங்களின் அடிப்படையிலோ அல்லது அதிகார வர்க்கங்களின் உதவியுடனோ தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் பலர் தங்கியிருப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதைச் சம்பந்தப்பட்டவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சவர்க்காரத்தின் விலையும் எகிறல்!

கொழும்பு, ஏப். 25

இலங்கையின் வர்த்தக வரலாற்றில் முதல் தடவையாக சவர்க்காரங்களின் விலைகள் அதிகூடிய மட்டத்தை எட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது வெளியாகியுள்ள புதிய விலைக்கமைய, ஒரு சவர்க்காரத்தின் விலை 200 ரூபாவை அண்மித்துள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

அதற்கமைய ஒரு கட்டி சன்லைட் சவர்க்காரம் 135 ரூபாவை எட்டியுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

பேபி சவர்க்காரம் ஒரு கட்டி 175 ரூபாவாகவும், லைபோய் சவர்க்காரம் ஒன்று 145 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இவ்வாறான விலைகளிலேயே ஏனைய சவர்க்காரங்களும் விற்பனை செய்யப்படுகின்றன எனத் தெரியவந்துள்ளது.

புதிய சவர்க்கார விலைகளை உறுதி செய்யும் படங்களை பொது மக்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

## 145 ரூபாவுக்கு சதொசவில் அரிசி!

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக விநியோகிக்கப்படுவதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு கிலோ கிராம் நாட்டரிசியை 145 ரூபாவாக்கு சதொச ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என அந்த அமைச்சு அறிவித்துள்ளது.

சிவப்பரிசியை 145 ரூபாவுக்கும் மற்றும் ஒரு கிலோ சம்பா அரிசியை 175 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முடியும்.

ஒரு வாடிக்கையாளருக்கு அதிகபட்சம் 05 கிலோ மாத்திரமே கொள்வனவு செய்யமுடியும் என வர்த்தக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வரிசையில் நின்ற மக்களுக்கு சுற்றுலாப் பயணி ஒருவர் உதவி




தென்னிலங்கையில் அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்காக நீண்ட வரிசையில் நின்ற மக்களுக்கு வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உதவி செய்துள்ளார்.

வெலிகம பிரதேசத்தில் வெயில் மழை பாராமல் சதொச வரிசையில் நின்ற 129 பேருக்கு 5 கிலோ அரிசியை கையளித்ததமையுடன் மருந்து வாங்க வந்தவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாவும் வழங்கியுள்ளார்.

இஸ்ரேல் பிரஜையான கிரேரோஸ்ம்ப்ராக் என்பவரே இந்த உதவிகளை வழங்கியுள்ளார்.

தனது சேவையை ஊடகங்கள் வாயிலாக பாராட்டுவதாகவும், அது தனக்குபெரும்பலமாகஇருப்பதாகவும் கிரே குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் மேலும் பல சேவைகளை இலங்கை மக்களுக்கு வழங்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி வெலிகம சதொசவுக்கு அருகில் நீண்ட வரிசையில் காத்திருந்து பொருள்களைக் கொள்வனவு செய்து கொண்டிருந்த 129 பேருக்கு 5 கிலோகிராம் அரிசி பொதிகளை இலவசமாக வழங்க கிரேரோச பிரக் நடவடிக்கை எடுத்தார்.

கடுமையான வெயிலுக்கு மத்தியிலும் அவர் இந்த சேவையை செய்துள்ளார். 110 ரூபாவில் அரிசி பெறலாம் என்ற எண்ணத்தில் சதொச விற்பனை நிலையத்தில் மக்கள் குவித்திருந்தனர். இதன்போது அந்த இடத்தில் மோட்டார் வாகனத்தில் பயணித்த வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் நீண்டவரிசைதொடர்பில்ஆராய்ந்துள்ளார்.

அதற்கமைய ஏனைய கடைகளில் அரிசி 210 ரூபாவுக்கும் சதொசவில் 110 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக அவர் அறிந்துகொண்டுள்ளார்.

அந்த சந்தர்ப்பத்தில் வரிசையில் நின்ற 123 பேருக்கும் தலா 5 கிலோ கிராம் அரிசியை பெற்றுக் கொடுப்பதற்கு அவர் தீர்மானித்தார். அதற்காக 80 ஆயிரம் ரூபா பணத்தை வெலிகம சதொசவுக்கு அந்த வெளிநாட்டவர் செலுத்தியுள்ளார்.

அதே போன்று 23 ஆம் திகதி காலி, கராபிட்டியவில் உள்ள அரச மருந்தகத்துக்கு சென்ற போது அங்கு நின்ற 20 பேருக்கு மருந்து கொள்வனவு செய்வதற்காக தலா 2 ஆயிரம் ரூபா பணம் வழங்குவதற்கும் அவர் நடவடிக்கை மேற்கொண்டார்.

அவர் தொடர்ந்து உதவிகளை செய்யவிரும்கிறேன்எனவும்வெளிநாடுகளில் வாழ்பவர்களையும் இலங்கை மக்களுக்கு உதவுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வறிய பிள்ளைகளின் கல்விக்காக பணமனுப்பிய சீன முன்பள்ளி மாணவர்!

சீனாவின் ஹெங்ஷு பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளி மாணவர்கள் சிலர் தமது அன்றாடச் செலவுக்கு பெற்றோரிடம் இருந்து கிடைக்கும் பணத்தை, இலங்கையில் உள்ள வறிய பிள்ளைகளின் கல்விக்காக அன்பளிப்பு செய்துள்ளனர்.

இலங்கை ரூபா பெறுமதியில் 50 லட்சம் ரூபாவை இந்த முன்பள்ளி மாணவர்கள் சேகரித்துள்ளனர் என இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நிதி இலங்கையில் குறைந்த வருமானத்தைப் பெற்றும் பெற்றோரின் பிள்ளைகளின் நலன்களுக்கு பயன்படுத்தப்படும் எனவும் தூதரகம் கூறியுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தமிழகத்தை சேர்ந்த யாசகர் ஒருவர் அண்மையில் 80 ஆயிரம் ரூபா (இலங்கை பெறுமதி) பணத்தை அன்பளிப்பு செய்திருந்தார்.

இந்த நிலையில், சீனாவின் முன்பள்ளி மாணவர்கள் இலங்கையின் வறிய குடும்பங்களின் பிள்ளைகளுக்காக நிதியை வழங்கியுள்ளனர்.

## புலம்பெயர் இலங்கை தொழிலாளர் பணம் அனுப்பும் தொகை அதிகரிப்பு

### மத்திய வங்கி அறிக்கை

இலங்கைக்கான வெளிநாட்டு நாணய பரிமாற்றத்தின் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பணம் 2022 மார்ச் மாதத்தில் சிறிய அதிகரிப்பு கண்டுள்ளது.

பெப்ரவரியில் 20.5 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்த இலங்கை தொழிலாளர்களின் பணம் மார்ச் மாதத்தில் 31.8 கோடி அமெரிக்க டொலர் களாக அதிகரித்துள்ளது.

மார்ச் 2021 இல் இலங்கை பெற்ற 61.2 கோடி அமெரிக்க டொலர்களை விட இந்த தொகை இன்னும் குறைவாகவே உள்ளது. மார்ச் மாத தொடக்கத்தில் இருந்து இலங்கை நாணயத்தை மிதக்க மத்திய வங்கி முடிவு செய்ததை அடுத்து இந்த சிறிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

## மட்டு இளம் ஊடகவியலாளர் திடீர் சுகவீனத்தால் உயிரிழப்பு!

மட்டக்களப்பு-துறைநீலாவணையைச் சேர்ந்த ஆசிரியரும் இளம் ஊடகவியலாளருமான பாக்கியராசா மோகனதாஸ் சனிக்கிழமை இரவு காலமானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இளம் ஊடகவியலாளரான இவர் குறுகிய காலத்தினுள் இலங்கையில் வெளிவருகின்ற பிரபல நாளிதழ்களில் தொடர்ந்தும் பல்வேறு கட்டுரைகள், அரசியல்வாதிகளின்பேட்டிகள், கலைஞர்களின் படைப்புக்கள் எனப் பல்வேறு விடயங்களை வெளிக்கொண்டுவந்துள்ளார்.

பல்துறைக்கலைஞரான இவருக்குக் கிழக்கு மாகாண கலாசார திணைக்களத்தால் கிழக்கு மாகாண இளம் ஊடகவியலாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார்.

சுகவீனம் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் சிகிச்சை பலனின்றி சனி இரவு உயிரிழந்துள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 3 மணியளவில் துறைநீலாவணை பொது மயானத்தில் நடைபெற்றன.

அன்னாரின் மறைவு கவலைக்குரியது. அவரின் இழப்பானது கிழக்குமாகாண ஊடகத்துறைக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பு என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir





# செர்பிய ஓபன் டென்னிஸ் தொடர் ஜோகோவிச், ரூப்லெவ் இறுதியில்!

செர்பிய ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான அரையிறுதியில் ரஷ்ய வீரர் அண்ட்ரே ரூப்லெவ் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில் இத்தாலியின் பெபியோ போக்னிநியும் ரஷ்ய வீரர் அன்ட்ரே ரூப்லெவ்வும் ஒருவரையொருவர் எதிர்கொண்டனர். இப்போட்டியில் 6-2, 6-2 என்ற நேர் செட்களில் இலகுவாக வெற்றிபெற்ற அண்ட்ரே ரூப்லெவ் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

மற்றுமொரு போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான நோவக் ஜோகோவிச், கரேன் கச்சனோவை எதிர்கொண்டார். அந்தப் போட்டியில் 4-6 என முதல் செட்டை இழந்த நோவக் ஜோகோவிச், அடுத்த இரண்டு செட்களையும் 6-1, 6-2 எனக் கைப்பற்றி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.

நேற்று இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நோவக் ஜோகோவிச் - அன்ட்ரே ரூப்லெவ் ஒருவரையொருவர் எதிர்கொண்டனர்.

# வடக்கின் சமரில் நடப்பு சம்பியன் சென். ஜோன்ஸ் கல்லூரி மத்திய கல்லூரியை வீழ்த்தி கிண்ணத்தை தக்க வைத்தது



யாழ். மத்திய கல்லூரி மற்றும் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரிகள் மோதிய 115 ஆவது வடக்கின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது நாள் ஆட்டத்தின் நிறைவில் 171 ஓட்டங்களுடன் முன்னிலையில் களமிறங்கியிருந்த சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் கமலபாலன் சபேசன் நேற்று மு தினம் அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 105 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

220 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. மத்திய கல்லூரியின் நியூட்டன் 3 விக்கெட்டுக்களையும், கௌதம் மற்றும் கஜன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மதியபோசன இடைவேளைக்கு சற்றுமுன்னர் இன்னிங்ஸ் நிறைவுசெய்யப்பட, 263 என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி அணி, தங்களுடைய முதல் இரு விக்கெட்டுகளையும் வெறும் 4 ஓட்டங்களுக்கு இழந்து தடுமாறத்தொடங்கியது.

எனினும் ஸ்ரீதரன் சாரங்கன் மற்றும் ஆனந்தன் கஜன் ஆகியோர் நிதானமான ஆட்டத்தை மேற்கொண்டு ஐந்தாவது விக்கெட்டுக்காக 91 ஓட்டங்களை பகிர்ந்த நிலையில், கஜன் 53 ஓட்டங்களோடு ஆட்டமிழந்தார். அதனைத்தொடர்ந்து சாரங்கன் ஸ்ரீதரன் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் வீழ்த்தப்பட, மத்திய கல்லூரி அணி 163 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் அஸ்நாத் 6 விக்கெட்டுகளையும், விதுசன் மற்றும் கஜகர்ணன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். மொத்தமாக விதுசன் மற்றும் அஸ்நாத் ஆகியோர் தலா 10 விக்கெட்டுக்களை இந்தப் போட்டியில் கைப்பற்றியிருந்தனர்.

இம்முறை வெற்றிபெற்றுள்ள சென். ஜோன்ஸ் கல்லூரி நடப்பு சம்பியனாக தங்களுடைய 38 ஆவது வெற்றியைப் பெற்றுள்ளது. மத்திய கல்லூரி அணி 28 வெற்றிகளை இதுவரை அடைந்துள்ளது.

# சர்வதேச கிரிக்கெட் சபையின் பொது முகாமையாளராக வசீம் கான்



சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) கிரிக்கெட் பொது முகாமையாளராக பாகிஸ்தானின் வசீம் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக 3 வருடகால ஒப்பந்தத்தில் இணைந்திருந்த வசீம் கான், தன்னுடைய ஒப் பந்த காலம் நிறைவுக்கு வருவதற்கு 4 மாதங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து விலகியிருந்தார். அவர், இங்கிலாந்து கவுண்டி அணியான லீசெஸ்டர்ஷையர் கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் செயற்பட்டுள்ளார்.

தன்னுடைய புதிய பதவி குறித்து கருத்து வெளியிட்ட வசீம் கான், ஐ.சி.சியுடன் இணைவதை பெருமையாக கருதுகிறேன். எமது கிரிக்கெட் விளையாட்டை வலுப்படுத்தவும் வளர்ச்சிக்கு அழைத்துச்செல்வதற்கும், எமது உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் ஆவலோடிருக்கிறேன்.

மகளிர் கிரிக்கெட்டின் வளர்ச்சியில் ஐ.சி.சியின் அர்ப்பணிப்பைக்கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அடுத்த தசாப்தத்தில் குறிப்பிட்ட வளர்ச்சியை விரைவுபடுத்துவதில் எனது பங்களிப்பை வழங்குவேன், என்று தெரிவித்திருக்கிறார்.

# நோ-போல் சர்ச்சையில் ரிஷப் பண்ட் உள்ளிட்ட மூவர் மீது ஐ.பி.எல். நிர்வாகம் நடவடிக்கை










ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த 34 ஆவது லீக் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின்போது டெல்லி அணி வெற்றிபெற 6 பந்துகளுக்கு 36 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இந்த நிலையில் மக்கோய் வீசிய முதல் 3 பந்திலும் ஹட்ரிக் சிக்ஸரை ரோமன் பவல் பறக்கவிட போட்டியில் விறுவிறுப்பு எகிறியது.

மக்கோய் வீசிய 3 ஆவது பந்து, துடுப்பாடிக்கொண்டிருந்த ரோமன் பவலின் நெஞ்சு வரை வந்ததால், இதனை முறையற்ற பந்துவீச்சு என்று அறிவிக்க வேண்டும் என்று மறுமுனையில் நின்ற துடுப்பாட்ட வீரரான குல்தீப் யாதவ் முறையிட்டார். ஆனால், அது நோ போல் இல்லை என்று நடுவர் மறுக்க, அணித் தலைவர் ரிஷப் பண்ட், களத்தில் இருந்த பவல், குல்தீப் யாதவ் இருவரையும் உடனடியாக வெளியேறி வரும்படி அழைத்தார். அதன் பின்னர் உதவிப் பயிற்சியாளர் பிரவீன் அம்ரேயை மைதானத்துக்கு உள்ளே அனுப்பினார். அவர் உள்ளே வந்து நடுவர்களிடம் விவாதம் செய்தார். ஆனால், நடுவர்கள் அம்ரேயை உடனடியாக அங்கிருந்து வெளியேறச் சொன்னார்கள். எல்லைக் கோட்டுக்கு அருகே இருந்த எதிரணி வீரர் ஜோஸ் பட்லர் இதுபற்றி ரிஷப் பண்டிடம் காரசாரமாக விவாதம் செய்தார். இதனால் ஆட்டத்தில் பெரிய பரபரப்பு ஏற்பட்டது. பிரவீன் அம்ரே எல்லைக் கோட்டுக்கு வெளியே திரும்பியவுடன் ஆட்டம் தொடர்ந்தது. ஆயினும், போட்டி தடைப்பட்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், டெல்லி கப்பிட்டல்ஸ் அணியால் வெற்றி இலக்கை எட்ட முடியவில்லை.

இந்தப் போட்டியின் போது ரிஷப் பண்ட் நடந்து கொண்ட விதத்திற்கு பலரும் கண்டனங்களைத் தெரிவித்தனர். அவர் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கிறார். இந்த நிலையில், குறித்த போட்டியில், ஐ.பி.எல். போட்டியின் விதிமுறைகளை மீறினார் என டெல்லி கப்டன் ரிஷப் பண்டுக்கு போட்டிக் கட்டணத்தில் 100 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஐ.பி.எல். நிர்வாகம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, ரிஷப் பண்ட் தனது தவறை ஒப்புக்கொண்டுள்ளார் எனவும், ஐ.பி.எல். நடத்தை விதிமுறைகளில் இரண்டாம் நிலைத்தவறைச்செய்தமையால் அவர் தண்டிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் போட்டியில் முறையற்று நடந்துகொண்ட குற்றச்சாட்டில், டெல்லி அணியைச் சேர்ந்த ஷர்துல் தாக்கூருக்கு போட்டிக் கட்டணத்தில் 50 சதவீதம் அபராதமும், உதவி பயிற்சியாளர் பிரவின் அம்ரேக்கு போட்டிக் கட்டணத்தில் 100 சதவீதமும் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த விதி மீறலுக்காக அம்ரே ஒரு போட்டியில் பங்கேற்பதற்கான தடையையும் சந்திக்க நேரிடும், என்றும் ஐ.பி.எல். நிர்வாகம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காலிமுகத்திடலை சுற்றியுள்ள பகுதி ஆணிகளுடனான வீதித்தடைகள்

கொழும்பு, ஏப். 25

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள ஆர்ப்பாட்ட பேரணி நேற்று ( (ஞாயிற்றுக்கிழமை) ஜனாதிபதி செயலகத்தை சென்றடைந்தது என ஆர்ப்பாட்ட பேரணி ஏற்பாட்டார்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை காலிமுகத்திடலை சுற்றியுள்ள பகுதியில் ஆணிகளுடனான வீதித்தடை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆணிகளுடனான வீதித்தடைகளால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதார அமைச்சின் இணையத்தளத்தின் மீது 'தமிழீழ சைபர் படை' எனும் குழுவால் தாக்கு!

சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீது சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

'தமிழ்ஈழசைபர்படை' என்றுதன்னை அடையாளப்படுத்திக்கொள்ளும் குழுவால் இவ்வாறு குறித்த இணையத்தளம் ஹேக் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி (http://www.health.gov.lk/) எனும் இணையத்தளத்தின் மீதே இவ்வாறு சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# பியல் நிஷாந்த, லொஹான் ரத்வத்தவுக்கு முன்னர் இருந்த ராஜாங்க அமைச்சு பதவி



நாடாளுமன்ற உறுப்பினர்களான பியல் நிசாந்த மற்றும் லொஹான் ரத்வத்த ஆகியோர் முன்னர் வகித்த இராஜாங்க அமைச்சுப் பதவிகளுக்கு மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்மூலம், இரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது இராஜாங்க அமைச்சுப் பதவிகளில் தொடர்ந்து பணியாற்றுவார்கள் என ஜனாதிபதி ஊடக பிறவு தெரிவித்துள்ளது.

லொஹான் ரத்வத்த இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான கைத்தொழில் இராஜாங்க அமைச்சராகத் தொடர்ந்தும் செயற்படுவார்.

இதேவேளை, பியல் நிஷாந்த, பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளிகள் மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் பதவியில் தொடர்வார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# எரிபொருளுக்காக இனிமேல் நீண்ட வரிசை தேவையில்லை

## எரிசக்தி அமைச்சு உத்தரவாதம்

எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை படிப்படியாக முடிவுக்கு வரும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் எதிர்வரும் மூன்று நாள்களில் எரிபொருள் ஏற்றிய அதிகமான கப்பல்கள் வரவுள்ளதால், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு படிப்படியாகக் குறையும் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

டீசல் மற்றும் பெற்றோல் ஆகிய இரண்டும் அடுத்த மூன்று நாள்களில் நாடு முழுவதும் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# கீழ்ப் பகுதி கழன்று பாதியான பஸ்



அநுராதபுரத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த அரச போக்குவரத்துச் சேவை பஸ்ஸின்

கீழ் சில்லுப் பகுதி ஒன்று தன்பாட்டில் கழன்றதால் பஸ் விபத்துக்குளானது. எனினும் பயணிகளுக்கோ வீதியில் சென்றவர்களுக்கோ பாதிப்பு ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

# ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் அடையாள வேலை நிறுத்தம்!

*சுகயீனவிடுப்பு போராட்டத்தை நடத்த ஆசிரியர்கள், அதிபர்கள் தீர்மானித்துள்ள நிலையில் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் ஒத்தி வைத்துள்ளது.*

*பொருளாதார நெருக்கடி நிலமைக்கு தீர்வாக மாணவர்களையும் ஆசிரியர்களையும் அவர்களது வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலைக்கு அனுப்புமாறு கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்து இன்று சுகவீன விடுப்பு போராட்டத்தை முன் னெடுக்கவுள்ளது.*

*இந்நிலையில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் 2021 ஆம் ஆண்டு தரம் 6,7 மற்றும் 8 ஆகிய மாணவர்களுக்கான மூன்றாம் தவணை பரீட்சை நடத்தப்பட்டு வருகின்றன.*

*எனினும் இன்று நடைபெறவிருந்த பரீட்சைகள் எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.*

*எனினும் கடந்த 20ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சைநாளை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அன்றைய தினம் நடைபெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

## தம் திட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை வெளியிடப்படவில்லை.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை தீர்ப்பது தொடர்பில் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு சில யோசனைகளை முன்வைத்திருந்தனர் என்பது தெரிந்ததே.

## பிரதமரைப் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அழகப்பெரும ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு எழுதியுள்ள கடிதம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே நாமல் ராஜபக்ஷ இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு பதவி விலகல் தீர்வு அல்ல. கட்சி வேறுபாடுகளின்றி அனைவரினதும் ஒத்துழைப்புத்தான் மிகவும் அவசியம். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைப் பதவி விலகுமாறு கோருவதற்கு எவருக்கும் அருகதை இல்லை. அவர் மக்கள் மனதை வென்ற தலைவர்.

தற்போதைய புதிய அமைச்சர்களையும் இராஜாங்க அமைச்சர்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே நியமித்தார். எனவே புதிய அமைச்சரவை தொடர்பில் ஜனாதிபதிதான் தீர்மானம் எடுக்கவேண்டும்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தும் நோக்குடன் எமது கட்சிக்குள் இருந்தும் வெளியில் இருந்தும் சிலர் செயற்படுகின்றனர். அவர்கள் தொடர்பில் நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். நிலையானதோர் அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

## ஆர்ப்பாட்டங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது என சிவில் அமைப்புக்கள் எனக்கு அறிவித்துள்ளன. அம் புலன்ஸ்கள், பாடசாலை வான்கள் மற்றும் பஸ்கள், பொது போக்கு வரத்து, ஊழியர்களின் போக்குவரத்து, சுற்றுலா பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் மற்றும் சேவைகளின் விநியோகம் போன்றவற்றை சீராக இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி மத்தியஸ்தம் செய்து போராட்டப் பகுதிகள் வழியாக வாகனப் போக்குவரத்து தடையின்றி செல்வதை உறுதி செய்வதற்கு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குமாறும் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

## தமிழ் மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டொரு தினங்களில் இன்றைய கூட்டத்தின் தீர்மான அறிக்கை வெளியிடப்படும். அதன் பொறுப்பு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல விடயங்களில் ஒற்றுமையான தீர்மானங்கள் எட்டப்படவில்லை என்ற கசப்பு இருந்தாலும், இப்படி கட்சிகள் சந்தித்து பேசுவது ஆரோக்கியமானது என்ற நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

ஆகவே அந்த அளவுக்கு இயன்றதை நாம் செய்வோம். தமிழ் மக்கள் மத்தியில் இன்னமும் தமக்கான அரசியல் தலைமை இல்லை என்ற உணர்வு இருந்துகொண்டு உள்ளது. என்றாலும் சுயமாக சிந்தித்து, கூட்டாக இயங்கும் நிலைமை ஒன்று உருவாகும், அது விரைவில் வெளிப்படுத்தப்படும் என நம்புகின்றோம். – என்றார்.

## பதவியை விட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திட்டவட்டமாக அறிவித்திருந்தார். அரசியல் மற்றும் கட்சி வரலாறு தெரியாத ஒரு சிலரே தன்னைப் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு கூறி வருகின்றனர் என்றும் பிரதமர் மேலும் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்த கருத்து தொடர்பில் முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் ஊடகங்களிடம் மேலும் தெரிவிக்கையில் –

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகளால் நாடு பேரவலத்தைச் சந்தித்துள்ளது. எனவே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அமைச்சரவையும் உடனடியாக பதவி விலகி அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடன் இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு வழிவிட வேண்டும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகுவதைத் தவிர அவ ருக்கு வேறு வழி ஏதுமில்லை. எனவே பழுத்த அரசியல்வாதியான அவர் எமது கோரிக்கையை ஏற்பார் என்று இன்னமும் நம்புகின்றோம். – என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் யாப்பா சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்று மாலை பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமெரிக்க தூதர், கொக்குவிலில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியுள்ள நிலையில் இஎதச் சந்திப்பு இடம்பெற்றது.

இன்றைய தினமும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் அமைப்புக்களின் தலைவர்கள், வர்த்தக பிரதிநிதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் அமெரிக்கத் தூதுவர் சந்தித்து கலந்துரையாடத் திட்டமிட்டுள்ளார்.

நாளை மறுதினம் வரை அவர் இங்கு தங்கியிருப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கைப் போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் இப்பெண் உயிரிழந்துள்ளார் எனப் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

பூண்டுலோயா – வெவஹேன பகுதியைச் சேர்ந்த ஆர். ஜி. அனுாகுமாரி (வயது 55) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் சிறுகாயங்களுக்குள்ளானார். அதில் பயணித்த பெண் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பூண்டுலோயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2022இல் வெளியிடப்பெற்றது.